கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம்
இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு
கலைமாணித்தேர்வு 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

LIBRA
10 JUN
EASTERN UNIVERS

**SOCS – 2101 Classical Sociological Theory**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி 1ல் யாதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி 11ல் யாதேனும் ஒரு வினாவுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி - 1

01. I. சமூகவியலில் கோட்பாடுகளின் பல்வகைத்தன்மை என்பது தவிர்க்கப்பட முடியாததாகும். பரிசீலனை செய்க.

(13 புள்ளிகள்)

II. தொல்சீர் சமூகவியல் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களை இனங்கண்டு விளக்குக. (12 புள்ளிகள்)

02.I. குலக்குறியம் (Totamism) சமூகத்தின் அடையாளமாக எவ்வாறு செயற்படுகின்றது என்பதனை எமைல் டெர்கைமின் (Emil Durkheim) சமய வாழ்வின் ஆரம்பநிலை வடிவங்கள் (The Elimentory Forms of Religious Life) எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

(13 புள்ளிகள்)

II. சமூகம், தனிமனிதனுக்கிடையிலான தொடர்பினை எமைல் டெர்கைமின் (Emil Durkheim) எடுத்துக்காட்டுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(12 புள்ளிகள்)

03. பின்வரும் எண்ணக்கருக்களைத் தெளிவுபடுத்துக.

I. கூட்டுப் பிரக்ஞை (Collective Consciowness) (13 புள்ளிகள்)

II. சமூகப்பிறழ்வு (Social Anomie) (12 புள்ளிகள்)

04.I. "சமூகவியலில் இயற்கை விஞ்ஞான முறையை வலியுறுத்துவது நேர்க்காட்சிவாதமாகும்" இக்கூற்றை ஏற்றுக்கொள்கின்றீரா? தெளிவுபடுத்துக.

(13 புள்ளிகள்)

II. எமைல் டெர்க்கைமால் வரையறுக்கப்பட்ட சமூகவியலின் முறையியல் பற்றி விபரிக்குக.

(12 புள்ளிகள்)

## பகுதி – 11

01. "சமூக ஒருங்கிணைவானது (Social Solidarity) மரபுரீதியான சமூகத்தை விட நவீன சமூகத்தில் குறைவாகவே காணப்படுகின்றது." எனும் கூற்றை எமைல் துர்கெய்மின் (Emil Durkheim) நூல்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(25 புள்ளிகள்)

02. நேர்க்காட்சிவாதம் கூறும் அடிப்படை விடயங்கள் இன்றைய சமூகவியல் ஆய்விற்கு எந்தளவிற்குப் பொருத்தமானது என்பதைப் பகுப்பாய்வு செய்க.

(25 புள்ளிகள்)